**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2019**

# C031 தமிழகப் பண்பாட்டு வரலாறு

**காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக. (15x1=15)**

1. தமிழ்ப் பெண்களின் பண்பு நலன்கள் எவை?
2. துக்கத்தின் அடையாளமாகச் சீனர்கள் எந்த நிறத்தைப் பயன்படுத்துகின்றனர்?
3. தமிழர்களின் அகப் பண்பாடுகளுள் ஒன்றினை எழுதுக.
4. திரைகடல் ஓடியும் எதைத் தேடவேண்டும்?
5. மாதவி ஆடிய கூத்துகளின் எண்ணிக்கை எவ்வளவு?
6. தஞ்சைக் கோபுரத்தின் உயரம் எத்தனை அடி?
7. தமிழ் அடி நூல்கள் எத்தூய்மையை வலியுறுத்துகின்றன?
8. புத்தரின் இயற்பெயர் என்ன?
9. சொக்கநாத நாயக்கரின் மனைவி பெயர் என்ன?
10. ஆயிரங்கால் மண்டபத்தில் இருக்கும் சிலைகளுள் அற்புதமான சிலைகள் இரண்டினைக் கூறுக.
11. வலங்கைப் பிரிவிலுள்ள சாதிகளின் எண்ணிக்கை எவ்வளவு?
12. தமிழ்ப் பண்பாட்டைப் பெரிதும் பாதித்த மொழிகள் இரண்டு எவை?
13. எந்த மன்னன் காலத்தில் வட்டெழுத்துகள் தமிழ் வடிவத்திற்கு மாற்றப்பட்டன?
14. திருக்குறளுக்குச் சிறந்த உரை யாருடையது?

15. கல்வெட்டுகள் மனைவியை எவ்வாறு குறிப்பிடுகின்றன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பண்பாட்டுக் கூறுகளை எழுதுக.
2. பண்பாடும் குறியீடும் உணர்த்தும் முறைகளைக் குறிப்பிடுக.
3. சீவக சிந்தாமணியிலுள்ள சமண நெறிகளை விளக்குக.
4. அற நூல்களின் பெயற்களை எழுதுக.
5. திருமலை நாயக்கரின் கோயில்கபணிகளை விவரி?
6. சிறுதெய்வ வழிபாட்டு முறைகளை விவரிக்க.
7. கற்பதுக்கை – குறிப்பு வரைக.
8. குடவோலை முறை என்றால் என்ன.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பண்பாட்டு மாற்றங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) அக உணர்வை வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளை விவரிக்க.

2. (அ) இரட்டைக் காப்பியங்கள் உணர்தும் தமிழர்களின் பண்பாட்டினைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) நாயக்கர் காலக் கலை வளர்ச்சி குறித்துக் கட்டுரைக்க.

3. (அ) இந்தியப் பண்பாட்டின் சிறப்புகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) கலையும் கலை வல்லவர்களும் குறித்துக் கட்டுரை வடிவில் விடை எழுதுக.

* * *